உளி 1 | ஓசை 38 | ஏப்ரல் - 2020 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

முகப்பு ஓவியம் :
ஓவியர் ரவி பேலட்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
9469375575



படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| மதுசூதன் | - 4 |
| சந்துரு | - 5 |
| தி.கலையரசி | - 6 |
| குழலி குமரேசன் | - 7 |
| கோ.ஸ்ரீதரன் | - 8 |
| கனகா பாலன் | - 9 |
| பொள்ளாச்சி முருகானந்தம் | - 9 |
| முகம்மது றியால் | - 10 |
| மஹா பர்வீன் | - 11 |
| க.சித்தார்த்தன் | - 12 |
| பெருமாள் ஆச்சி | - 13 |
| இரா.செல்வகுமார் | - 14 |
| ஜே.பிரோஸ்கான் | - 15 |
| சுஜய் ரகு | - 16 |
| இராம வேல்முருகன் | - 17 |
| நுஆல் | - 18 |
| சுயம்பு | - 19 |
| சேலம் ராஜா | - 20 |
| சுசீந்திரன் | - 21 |

| | |
|---|---|
| தங்கேஸ் | - 22 |
| அம்பிகா குமரன் | - 23 |
| மதுரா | - 24 |
| க.சோ.திருமாவளவன் | - 25 |
| வளவன் கரிகாலன் | - 26 |
| தெ.சு.கவுதமன் | - 27 |
| சுஜாதா கண்ணன் | - 28 |
| ப.காளிமுத்து | - 29 |
| துரை. நந்தகுமார் | - 30 |
| அமுதா தமிழ்நாடன் | - 31 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 32 |
| சே.தண்டபானி தென்றல் | - 32 |
| (Z)ஜபீர் | - 33 |
| தோழன்பிரபா | - 34 |
| கருவை ந.ஸ்டாலின் | - 35 |
| குறிஞ்சி நாடன் | - 36 |
| கார்த்தி | - 37 |
| முனியாண்டி ராஜ் | - 38 |
| மு.பெ.சத்தியநேசன் | - 39 |

# பழைய வீட்டின் வாசம்



முன்பிருந்து வீட்டின்
புகை நெடி
பழைய புத்தகங்களின்
மேலடர்ந்த தூசு
புதிதாய் அறிமுகமான
பறவையின் எச்சம்
அம்மாவின் அழுக்குப்
புடவையில் சமையல்
வாசனை.
ஒற்றைப் பூவை முகர்ந்து
யோசிக்கும் ஒரு விடியலில்
அந்த வீட்டின் மரக்கதவு மெல்லத் திறப்பதை
உணர முடிகிறது.

*****

மூலைக்குத்தென
பிள்ளையாரை
வைத்திருந்தார்கள்.
வீட்டைக்கவனித்தவர்கள்
கண்ணில் படவேயில்லை
உடைந்த தும்பிக்கை.

******

வேப்பம் பூக்கள்
உதிர்ந்த தெருவில்
சோம்பல் பூனை
குறுக்கே போகும்.
கருத்த காம்பிழுக்கும்
நாய்க்குட்டிகளின்
இடைவெளியற்ற
அருந்தலில் அயர்ந்த
தாய்நாய்க்கு பரிவின்
காரணமாய் இட்ட
பழைய சோற்றை
கொத்தும் காக்கை
இனறைக்கு எப்படியும்
வரும் மணியார்டரென
வாசலில் அமர்ந்த
பாட்டியின் திண்ணை
இடிக்கப்பட்ட ஒரு
நாளில் எப்படி மறந்தேன்
அப்பா
கட்டிய திண்ணையைப் பற்றி
எதையாவது எழுத !

*****

அந்த அறை என்னுடையது.
மைக்கேல் ஜாக்சனும்
மடோனாவும் போஸ்டரில்.
அழுக்கு லுங்கியும் முண்டா
பனியனும் ஹேங்கரில்.
திறந்த குவளையில்
செத்துக்கிடக்கும் சிறுபூச்சி. டேப்ரிக்கார்டரில்
பாலு
இளைய நிலா பொழிவார்.
அலமாரியில் கார்ல் மார்க்சும் பட்டினத்தாரும்
பேசிக்கொள்வார்கள்.
மீராவின் கவிதைப்பக்கத்தில் அடிக்கோடிட்ட
பழைய என்னை இப்போதைய நான்
கவலையற்றிருத்தல் பற்றி சிறு பேட்டி
எடுப்பதாயிருக்கிறேன்.

******

வியாபித்த வானம்
உங்களுக்குப் பெரிது.
எனக்கது வட்டமிட்டு
வளைய ஒரு ப்ரதேசம்.
என் வாலிபத்தைப் பற்றி
இதற்கு மேல் கேட்காதீர்கள்.

⬢ **மதுசூதன்**



ஜன்னல் கம்பிகளோடு
அடிக்கடி உறைந்து விடுவதால்
துருப்பிடித்துக் கிடக்கின்றன
சம்யுக்தையின் விரல்கள்...
தயாராய் இருந்த
பிருத்திவிராஜன் வரவில்லை
சுமந்து செல்லும் குதிரை
வரும் வழியில்
முடமாக்கப் பட்டுவிட்டதாய் வதந்தி...!
மண் குதிரைமேலமர்ந்து
செயற்கை விளக்குகளுடன்
அழைத்துவரப்படுகிறான்
புதிய மணவாளன்
பரம்பரை
வெளிச்சத்தையேந்திவருமவன்
வெற்றிப் புன்னகையுடன்
மணவாட்டியின் ஜன்னலோரம் .
எட்டிப்பார்க்கிறான்
முகம் திருப்பி நிற்குமவளின்
முதுகில் விழும் வெளிச்சம்
அறைக்குள் நிழலை பிரசவித்து
இன்னொரு சிறைக்குள்
அவளைத் தள்ளுகிறது...
தூரத்தில் தடதடக்கும்
தண்டவாளங்களுக்கடியில்
இயலாமையில் நசுங்கும்
பிருதிவிராஜனின் குரல்
இளவரசியின்
காதுகளில் மோதி உடைகிறது...
இழப்பின் வாசனையை நுகர்ந்து
துளிர்த்தொழுகும்
அவளின் கண்ணீர்த்துளிகள்
வீட்டுக்குள் விழுந்து
புனிதம் கெடுப்பதற்குள்
சட்டெனத்துடைத்து
தீட்டுத்துணியெ
வெளியே வீசியெறிந்து
பெருமூச்சு விடுகிறது
பரம்பரை கௌரவம்...

**சந்துரு**



உனக்காக தொடுத்து
வைத்த கவிதைப் பூக்கள்
நிறையவே உள்ளன...
தேடி வந்து மாலையிட்டுக் கொள்ள
உனக்கு தான் நேரமில்லை.

என் வரிகளில் முளைத்த
நன்னிலவு இன்னும் தேய்பிறையின்
சுழற்சிக்கு போகாமல் காத்திருக்கிறது...
என்னுடன் சேர்ந்து தேன் நிலவாக்க
உனக்கு தான் புரியவில்லை.

நம் கவிதையை சுமந்த கனவுப்பறவைகள்
எல்லாம்
வலசைக்கு கூட போகாமல்
தவித்து கொண்டிருக்கின்றன...
அனல் தந்து அரவணைக்க
உனக்கு தான் தெரியவில்லை.

என் காதல் கருக்களில் எப்போதும்
நீ மட்டுமே விதையாகிப் புதைந்திருக்கிறாய்...
எனக்குள் தளிரரும்ப என்றுதான்
உன் காதல் துளிர்த்து வருமோ...
என்னவா...

⬣ **தி.கலையரசி**



அரூபனே...!
நேசிப்பின்
முதல் இழையென
மழலையின் மிருதுவான
மொழிபேசுகிறாய்...

உன்னதமென்னும்
வானிலிருந்து உதிரும்
மழையால்
உயிர்த்துக் கிடந்த அத்தனை
உயிர்களோடும் நான்...

என் நேச வார்த்தைகளுக்கு
அகராதியில்
அர்த்தங்கள் தேடியும் அர்த்தங்கள் வேறாகிட.....

நிகழ்தகவின் தீர்மானிப்பில் எனது
உடமையும் உரிமையும்
நான் நானில்லை
என்றுணர்கையில்....

எனை முன்னகர்த்திச் சென்று
வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பையும்
வர்ணங்களையும்
நீயெனக்குள்
உதிர்த்தபடியிருக்கிறாய்...

கடந்துபோன காலத்தை
மெல்லிய புன்னகையால்
வாழ்வதற்கான நம்பிக்கையை
பிரித்துணர மடிசாய்த்து
போதி சத்துவனாகிறாய்...

- குழலி குமரேசன்

# அவளும் நானும்.....



என்முப்பதிரண்டு பற்களின் மேல்
அப்படியொரு மையலென்றாய்
கடைசியில் காகிதத்தில்
சிரிக்கும் கிழவனாரே வென்றார்....

நாம் நின்று சிலாகித்த
பேருந்து நிறுத்த கூரை தகடு
துருப்பிடித்திருந்தது
என்னைப்போலவே
நீ கடக்கும் சொகுசு காரின்
பளபளப்பில் அப்படி சோபை இழந்திருந்தோம்
சீந்துவாரற்ற நாங்கள்....

நீ இறுதி வரை வருவாயெனத்தான்
உன் கைப்பற்றினேன்
இன்று என் இறுதி ஊர்வலம்
குறைந்தபட்சமாய்
உன் கைப்பட்ட மாலை கூட இல்லாமல்...

ஊர் பகைத்தேன்
உற்றமும் பகைத்தேன்
உண்மையில்
புகை எனக்கு பகையில்லை
உன் மனக்குகை ஆழம்
புரியாதவன் எனக்கு ...

அவளுடன் இருக்கும் அவன்கள்
அப்படி ரசிக்கின்றனர்
அவளற்ற அவன்களின்
அங்குலம் அங்குலமான
அங்கலாய்ப்பு கவிதைகளை....

வா என்றது இவ்வுருவம்
நீ போகாதே என்றது கறராய்
அவன் அவளுக்கு கொடுத்த
தங்க அட்டிகை....

இரண்டு சொட்டு கண்ணீரில்
விடைப்பெற்றாய்
இரண்டு புட்டியடித்தும்
இன்னும்
சமனடையவில்லையது...

உன் பிள்ளையின் பெயரை
வாஞ்சையாய்
அறிய முற்ப்பட்டேன்
ஏற்கனவே பேசியபடி
என்னதாய் இருக்குமோ என்கிற
வரட்டு நப்பாசையால்....

வித விதமாய் சீலை மாற்றுமுன்னை
அப்படி ரசித்தேன்
கடைசியில் என்னையும்
மாற்றுவாயென அறியாமலே...

⬣ **கோ.ஸ்ரீதரன்**

# சோடிக்கப்பட்ட சாலை

நேற்றுவரை சீண்டிப்பார்க்காத
அந்தச் சாலைதான்
சமன்பட்டு நீள்கிறது
கண்ணுக்கெட்டிய தூரம் வரை...

செடி கொடி மரமென
செழிப்பாக தீட்டப்பட்டிருக்கும்
சுத்தச் சுவர்கள் யாவுமே
எங்களுக்கு சொந்தமானவைதான்
சந்தேகம் வேண்டாம்...

ஒடிந்து தொங்கும்
மின்கம்பிகளை
மறைத்தாகி விட்டது
தகரத் தடுப்புக்குப் பின்னே
சர்வசுத்தம் சமத்துப் பொறுப்பாய்...

அயலவன் அகங்குளிர
அமைக்கப்பட்ட அந்தப் பாதைக்கு
எள்ளளவும் நொள்ளையில்லை
அந்த வாரம் மட்டுமே...!



- கன்கா பாலன்

பூஜ்ஜியத்தை
முட்டையென சொன்னவர்களிடம்......
பூமி முட்டைதான்
கர்ப்ப கூடும் முட்டைதானென சொல்வதற்குள்
முகத்தை திருப்பிக் கொள்கிறார்கள்.....

- பொள்ளாச்சி முருகானந்தம்

# மேல் வானம்



பூக்களால்
அர்ச்சித்துக் கொண்டிருந்த
அந்த நற்காரியத்தை
அவசரமாக
நிறுத்திக் கொள்கிறார்கள்
அவர்கள்

அன்னேரம் கீழிறக்கப்பட்ட
முழங்காத மேளமும்
உதிரும் பூப்பந்தலும்
பேரமைதியாகிப்போன வாசலும்
திமி திமிர்த்து நிற்க

புதிசாகப் பூசிய
மருதாணிச் சிவப்பும்
கன்னத்து மச்சமும்
கரைந்தோடிவிட
செந்நீர் வடிக்கிறது
எனது இளைய மகளின்
ஏமாந்து போன
திரு விழிகள்

மங்கல நூலவிழும்
வெறிச்சோடிப்போன
அந்த
மலர் மேடைக்கு முன்னால்
அடிமுறிந்த விறகாகி
சரிந்து விழுகின்றேன்
கலங்கி நிற்கும்
என் மகளைப்
பிறக்கச்செய்த நான்

⬣ முகம்மது றியால்



அயிரய அறிச்ச கணக்கா..
குறி சொல்றவுகளயிருந்து
சாமியாடிக பூசாரிகனு
ஊருக்கு பத்தாளுகயிருந்தாலும்
பறவையா அலஞ்சு திரிஞ்சு
அவுகவுக சொன்ன பத்தியத்திலிருந்து
இம்புட்டும் பிசிராம
இஞ்சியும் இனிக்க
கசாயம் ருசிக்கனு...
மென்டும் மெல்லாம
மொத்தமா உள்ள இறக்கி...

கல்யாண வீடானாலும்
கருமாதி வீடானாலும்
ஓரஞ்சாரமா நின்னு....

குண்டிச் சீலைய மாத்த
வக்கத்து நின்டாலும்...
அள்ளி பணம் தாரேனு
கண்ட சாமியிலயிருந்து
காணாத சாமிகளுக்கும்
கண்ணீரக் கொட்டி
தொட்டிலாட்டுன எங்காத்தாளுக்குத்தான்....

இதுவர தெரியாது
இப்ப வேணாம் வேணாமுனு
நாலஞ்சுவாட்டி
நான் சுத்தம் பண்ணிட்டு வந்தது...

● மஹா பர்வீன்



தேடிப்போய் காமம்
புசித்துவிட்டு
விபச்சாரி எனும் பெயர் வைத்து
வெளியேறிப்போனோம்!

கணவனை இழந்து
கண்ணீரில் நனைந்தவளின்
வானவில்லை உடைத்து
விதவையென பெயர் வைத்து
வெள்ளைச் சேலை பரிசளித்தோம்!

நேசித்த ஒருவனைக்
கரம்பற்ற விடாத
இச்சாதிய சமூகத்தின்
தடைகளைத் தாண்டியவளுக்குத்தான்
ஓடுகாலியெனும் பெயரை அந்த
பெண்மையின் கதவுகளில்
பெரியதாய் எழுதிவைத்தோம்!

தொடர்ந்த கொடுமைகளால்
துவண்டு
மன வலிதந்த
மண வாழ்வைவிட்டு
தாய்வீடு திரும்பிவிட்ட
தாரகைக்குத்தான்
வாழாவெட்டியெனும் பெயரை அவள்
வாசலில் வீசியெறிந்தோம்!

இந்த
விஷ வார்த்தைகளை
வீசிய நாவினால்தான்
மகளிர் தின வாழ்த்துகளையும்
மறக்காமல் சொல்லி வைத்தோம்!

⬣ க.சித்தார்த்தன்



கதவுகள் மரத்தால் ஆனவை..
பாதுகாக்கப் பயன்படுபவை..
பாரம்பரியம் சுமப்பவை..
வீடென்பதன் விலாசமாக இருப்பவை..
வீதியிலிருந்து விலக்கி வைப்பவை..
இரகசியங்களைப் பாதுகாப்பவை..
இரவைப் பூட்டி வைப்பவை..
ஆபத்துகளை நெருங்க விடாதவை.
ஆசைகளை அடைத்து வைப்பவை.
குடும்பத்திற்கான கோட்டை வரைபவை..
குறுகிய எண்ணங்களைக் கொள்பவை..
மகிழ்ச்சிகளை மறைத்திருப்பவை
மனங்களைக் கட்டி வைப்பவை..
துயரங்களை வெளிக்காட்டாதவை.
உயரங்களுக்கேற்ப உருவாக்கப்படுபவை..
வெளிச்சங்களை விலக்குபவை..
விளக்கங்களை விரும்பாதவை..
புறக்காரணிகளை புறக்கணிப்பவை..
புகைச்சலை உள்வாங்குபவை..
பொதுவுடைக்கு எதிரானவை.
தனியுரிமை பேணுபவை..
குடியுரிமையைச் சுட்டுபவை..
பல ஏழ்மைக்கதவுகளின் பின்னால்
காலத்தைத் தொலைத்த கனவுகளின் இருளை
மறைத்திருப்பவை..

● **பெருமாள் ஆச்சி**



பித்து பிடித்தவன் போல் ஓங்கி அறைந்து
கொண்டிருந்த ஜன்னலின்
வலி தாங்கமுடியாமல் நொறுங்கி விழுந்த
காற்று
என் மடியில் வைத்திருந்த புத்தகத்தின் முதல்
பக்கத்தில் புரண்டு கொண்டிருந்தது...

அந்த முதல் பக்கத்தில் தான் நாலைந்து மணி
நேரமாய் என்னை தேடிக்கொண்டிருக்கிறேன்
ஒழித்து வைத்தவர்கள் என்னை சுற்றி தான்
நிற்கிறார்கள் ஆள்காட்டிவிரலை மழுங்களாக்கிக்
கொண்டு...

கோட்டர் கேட்டு அடம் பிடித்துக் கொண்டிருந்த
பேய்க்கு
பெயர் வைக்கத் தெரியாமல் தடுமாறிய சாமி
வரும் வழியில் ஒட்டப்பட்டிருந்த கண்ணீர் அஞ்
சலி பதாகையின் பெயர் சொல்லி விரட்டிக்
கொண்டிருந்தான் ...

அவசரமாய் ஓடிக்கொண்டிருந்தவன் சட்டென்று
நின்றான்
விஷயம் பெரியதாகத் தானே இருக்கும்
சுற்றி முற்றி பார்த்தவன் மூத்திரம் பெய்ய
செடி மறைவில் அமர்ந்தான்...

ஏட்டில் ஒன்றாகவும் பாட்டில் மற்றொன்றாகவும்
ராகம் கட்டும் வாழ்விற்கு எதிர்மறை
எண்ணத்தை விட மறதியே வரமாகக் கேட்டுப்
பார்க்கிறேன்...

செந்தாரப்பட்டி
⬣ **இரா.செல்வக்குமார்**

# ஆப்ரிக்க கதைகளில் வாழும் பட்டாம்பூச்சி



ஒரு மலைப் பாம்பின பசியொன்றை
ஒரு ஆப்ரிக்க பட்டாம்பூச்சி
எழுதிச் செல்கிறது.
பாம்பின் தீரா பசிக்கென என்னை
அது காடெங்கிலுமாக
துரத்திய அந்த சம்பவத்தை
எனது கடைசி நிமிடமென
பட்டாம்பூச்சி உயிரின் வலிமை பற்றி
தனது சக பட்டாம்பூச்சிகளுக்கு
எழுதி வைத்த மடலைத் தான்
இப்போது நான் படித்துக் கொண்டிருக்கிறேன்.
பட்டாம்பூச்சி இறந்ததாக அது எந்த
இடத்திலும் குறிப்பிடவில்லை
ஆனால் இது எனது இறுதி நிமிடமென
அது சொல்லியதில் இறந்ததாக
சேதி ஆப்ரிக காடுகளில் பரவியது
பட்டாம்பூச்சிகள் இப்போது
ஆப்ரிக காடுளில் வாழ்ந்துவிட
முடியாததை நினைத்து அங்கிருந்து
தமது பூர்வீகத்தை இழந்து
புறப்படுகின்றன
இச் சேதி ஆப்ரிக்க மலைப்புகளுக்கு
வருவதாக மடல்
குருதி படிந்த தொடர் புள்ளியில்
முடிந்திருந்ததை பார்த்த எனக்கு
இதன் முடிவு என்னாவாக இருக்குமென
யோசித்துக் கொண்டிருக்கிறேன்
மகள் தனது நோட்டுப் புத்தகத்தில்
சில பட்டம்பூச்சிகள் தேனருந்தி
மகிழ்வதாக ஒரு ஓவியத்தை
வரைந்து என் கைகளில் தந்து
சிரிக்கிறாள்.
அவள் சிரிப்பின் சப்தத்தில்
ஆப்ரிக்க பாம்புகள்
செத்து இருக்குமென கவிதையை
முடித்து வைக்கிறேன்.

- ஜே.பிரோஸ்கான்

# வானம் செய்யும் தும்பி



தும்பிகளை மிகவும் பிடிக்கும்

தும்பிகள் வாழ்வின் துயரிலிருந்து
விடுபட்டு கனவின் வானில்
ஒளிரும் நட்சத்திரங்கள்

கனவுகள் எண்ணத்தின்
மிகைப்பட்ட இரவின் இருளை
அதன் தன்மை மாறாமல்
எதிர்கொள்வன

எல்லையற்ற பயணம்
தும்பிகளுடையது
அவற்றுக்கு
காலமோ தூரமோ
ஒரு பொருட்டல்ல

தும்பிக்கும் கனவிற்கும்
ஒரே சிறகுகள்
ஒரே வானம்

சொற்கள் பிரயோகிக்காத
வெளி
தும்பியிடம் இருக்கின்றது

கனவின் கைவசமோ
வாழ்வை ருசிக்கின்ற
சர்வகாலம்

- சுஜய்_ரகு

# பொம்மைக் கூடம்



எனக்கு எல்லா
பொம்மைகளும் ஒன்றே
சில பொம்மைகள்
அழகாக இருக்கும்
சில பொம்மைகள்
வலிமையாக இருக்கும்
சில கோரப்பற்களுடன்
சில குரூர முகத்துடன்
சில சாந்தமாக
என பல்வேறு
குணங்களுடன் இருக்கும்

அழகான பொம்மையை
கோரப் பற்கள் குத்திக்கிழிக்கும்
சாந்தமான பொம்மையை
வலிமையானவை ஆக்கிரமிக்கும்.

வன்முறையைக்
கட்டவிழ்த்துவிட்டு
மறைந்து நின்று சில
வேடிக்கைப் பார்க்கும்.
வன்முறையால் அழகிழந்து
வடிவிழந்து
நார்நாராய்க் கிழிந்து சில
குப்பைத் தொட்டிக்குள்
ஒளிந்து கொள்ளும்.

பொம்மைகள் தங்களுக்குள்
அடித்துக் கொள்ளும்
தங்களுக்குள் கூட்டு சேரும்
தங்களுக்குள் கூடிக் களிக்கும்
தங்களுக்குத் தேவையான பொம்மைகளைத்
தேடும்
பிடிக்காத பொம்மைகளை
சீரழிக்கும்
தரம்பிரித்து அழகு பார்க்கும்.

எனக்கென்னவோ
எல்லா பொம்மைகளும் ஒன்றே
எனக்கு
அவற்றின் சுகதுக்கங்கள் பற்றிக்
கவலையேதும் இல்லை.
ஏனெனில்
நான் சுகதுக்கங்கள் கடந்தவன்
பொம்மைகளின் சாவு
பொம்மைகளின் மகிழ்வு
இரண்டும் எனக்கு ஒன்றே

எறும்புகளைத் துச்சமென நசுக்கும் மனிதனைப்
போல...

● **இராம வேல்முருகன்**
வலங்கைமான்



கைக்கெட்டும் தூரத்தில் தான்
நின்றிருந்தது கனவு.
நெருங்கிச் சென்று
அத்தனை காதலோடு
கட்டியணைத்து முத்தமிட விழைகையில்
திரும்பி ஒரு முறை முறைத்தது.
அதன்பின், இன்றுவரை
காண்பதெல்லாம் வெறும்
பொழுதுபோக்குச் சித்திரங்களே.

● **மா.காளிதாஸ்**

வெறுமையை விழுங்கி விடியும் இரவின்
கதைக்குள் தனித்திருக்கிறேன்..

நம்மிடம் பேச கடலளவு வார்த்தைகள் உண்டு..

இருந்தும் சந்திப்பையும் பேசுவதையும் நாமே
நிறுத்திக்கொண்டோம்..

நேசத்தின் நீள்விரல்கள் பொறுத்தி நிசப்தத்தில்
சலனத்தை வரைகிறது நினைவு..

முன் நாம் சிருஷ்டித்த யாமங்களின்
மெல்லிசைப் பொழுதுகள் நீர்மையில் கசிகிறது..

சில நேரங்களை அற்புதத்தைப் போல்
நிறைக்கவும் ..
சில நேரங்களை அலட்சியமாய் கடக்கவும்
செய்கிறாய் ..

நீயே என்னை அழகியாக்கினாய்..
நீயே என்னை அழவும் வைக்கிறாய்..

சில நேரம் சொர்க்கத்தையும் கணமெல்லாம்
ரணங்களையும் உன்னால் மட்டுமே
தரமுடிகின்றது....

இருந்தும் ஜீவிதம் உன்னுடனே
பயணப்படுகின்றது..
யாவும் நேசத்தின் பொருட்டு நிகழ்கின்றது..

● **நுஆல்**

ஒரு துரோக பிரிதலுக்கு பின்புதான்
அவள் மீதான பிரியங்கள்
அந்த வானை
வசப்படுத்தியிருந்தன,,,,

ஒரு மதயானையின்
சீரழிவிற்கு பின்புதான்,,,,
அவள் மீதான நேசங்கள்
இந்த பிரபஞ்சத்தை
சிறு புள்ளியாக்கியிருந்தன,,,,,,

கரை கடந்த பெரும் சுனாமிக்கு பின்புதான்
அவள் மீதான உணர்வுகள்
மண் பிளந்து வெளியேறும்
புதிய விதையின் இளந்தளிராய்,,,,,
துளிர் விட்டிருந்தன,,,,,,

பெரும் பேர்கால வலிக்கு பின்புதான்
அவள் மீதான அன்புகள்
இந்த பூமியை எட்டி பார்க்கும்
புத்தம் புது தலைச்சன் திசுவாய்
பிரசவமாகியிருந்தன,,,,,

இழப்பிற்கு பின்னான ஞானம்
ஒருவனை துறவியாக்கும்,,,,,
இழப்பிற்கு முன்னான ஞானம்
ஒருவனை மனிதனாக்கும்,,,,,

நானிரண்டுமில்லாமல்
அவளாகவே அவளுக்காகவே
மாறியிருந்தேன்,,,,,,
எனக்காக அவள் வாழும்போதெல்லாம்
அவளுக்காக வாழாமல்,,,,,,

உடனிருந்த போதெல்லாம்
அவளிடம் அரக்க மாமிசம்
சுவைத்துறிஞ்சிய இந்த நரகா சூரனிடம்
என்னென்ன எதிர்பார்த்திருப்பாள்,,,,,,

வெள்ளாடு குட்டியாய்
என் மடியில் உறங்க
கனவு கண்டிருப்பாள்,,,,,,,

வெள்ளரிக்கொடி பிஞ்சாய்
என் மார்பிலூற
துடித்திருப்பாள்,,,,,

இளநீர் கொலை தாங்கும்
தென்னங் கீற்றாய்
தன்னைத் தாங்க நினைத்திருப்பாள்,,,,,

தன் விழி வடியும் நீரோடையை
என் விரல் பூக்களில் துடைத்தெறிந்திட
வரம் கேட்டிருப்பாள்,,,,,,,

அவள் கூந்தல் களைத்து
அதன் பேரிடருக்குள்
நான் தொலைந்து போக
எத்தனை இரவுகள் விரும்பியிருப்பாள்,,,,?

அவள் பருவ கூட்டை தணிக்கும்
என் கோடைமழை ஈரத்திற்காய்,,,,
எத்தனை தவம் புரிந்திருப்பாள்,,?

குளிருக்கு அருந்தும் தேநீராய்
என் நாவு தீண்டிட
எத்தனை ஆசை வைத்திருப்பாள்,,,,?

பால் கட்டி அலறும் தாய்மையாய்
எத்தனை முறை உணர்வுகள் கட்டி
எனக்கு தெரியாமல் அழுதிருப்பாள்,,,,?

வெறும் மரக்கட்டையாய்
அவளை எரியவிட்டு
அதில் ஆனந்த குளியலிட்டு
அடங்கியவன் நான்,,,,,

வெறும் தெரு பொறுக்கி காகிதமாய்
அவளை கசக்கி எறிந்து விட்டு,,,,,,
காற்றிலே கவி வடிக்கும் கயவன் நான்,,,,

என்னாதிக்க திமிருறிஞ்சிய
அட்டை பூச்சியாய்
அவளை நசுக்கி பிழிந்துவிட்டு
அன்புரீய ஜடமாய் காத்திருக்கிறேன்,,,,,,
அவள் திரும்பும் நாளை எதிர்நோக்கி,,,,

அதுவரை,,,,,
இப்பிரபஞ்ச பேரிருள் கல்லறையோடு
தூங்குவதும் விழிப்பதுமாய்,,,,,
இயங்கிவிட்டு போகிறேன்,,,,,

⬢ சுயம்பு

# பெருங்கோபக் காதல்



பிரிவின் வயிற்றை கிழித்து
நிரம்பிக்கிடக்கும்
முத்தங்களையள்ளி
மாலை அணிந்து கொண்ட
பெருங்கோபக் காளியென
மாறிவிட்ட நீ

நீளும் இந்த
இடைவெளியின் குடுவையில்
என் சமரசங்களை ஊற்றி
கொதிக்க வைக்கிறாய்

இதுவரை வளர்ந்த
நேசத்தின் உடல்கள்
ஆவி பறக்கும் குமிழிகளாக
வெந்து உடைகிறது

நாட்களை ஒடித்து விறகாக்கி
துயரக்கனலை மலையளவு
கூட்டுகிறாய் கட்டுக்கடங்கா
ஆத்திரங்களால்

வண்ணங்களை சுமந்தபடி
கருகிய வண்ணத்துப் பூச்சியின்
சாம்பலாக கரைந்து கொண்டிருக்கிறது
நட்டாற்றில் தத்தளித்த
என் காதல்.

⬢ **சேலம் ராஜா**

# தேவதை சைத்தாயினி



ஒரு நேர்கோட்டு பயணத்தில்
எங்கிருந்தோ வந்த
இடைச்செருகலில்
ஒரு பாதம் படாத பிரதேசத்தில்
வந்து நிற்கிறேன்.

கரப்பான் பூச்சிகள்
திமிங்கலங்களைச் சுமந்து
களைத்துக் கிடந்தன சாலையோரத்தில்.

புணர்ந்து வியர்த்த
புள்ளி ராசாக்கள்
விரயமாகிய விந்துக்களையெண்ணி
அப்போதைக்கு
ஞானியாக மாறிக்கொண்டார்கள்.

அதீத ஆர்வம் கொண்ட
பெட்டைக் கோழிகள்
எதிர்ப்பது போல் அறிக்கைகள் விட்டு
வார்த்தைகளில் வக்கிரத்தை வடித்து
தினவெடுத்த தன் அந்தரத்தைச்
சொரிந்துகொண்டன.

வழக்கம்போல்
விவரம் அறியாத சீதக்காதி வள்ளல்கள்
வானளாவ புகழ்ந்து விருப்பங்களை
அள்ளித் தெளித்ததில்
அளவில் பெருத்தது
அவர்தம் கந்து.

**சுசீந்திரன்**

# நிழல்களின் காதலன்




நிழல்களில் செதில் விரிக்கும்
இந்த அரசமரத்திலை ஒன்றுக்குத் தெரியும்
கிளைகளின் கீழ்
தரையின் ஈரத்திற்கடியில் புதைந்திருக்கும்
ரகசியங்கள் ஒரு நாள் முளைக்குமென்பதும்
ஒரு மழைநாள் கொஞ்சம்
கலைத்துவிட்டுப்போக
எழும் முடிவில்லாத தேம்பல்களும்
என்றும் இவ்விடம் வந்தே சேருமென்பதும்

புங்கை மரத்தின் இலைகளில்
சட்டென முளைக்கும் கருப்பு முகம் ஒன்று
தலைகளில் இட்டுப்போகும் எச்சங்களில்
விரிகின்றன புல்லிக்கிடந்த நினைவுகள்
எல்லையின்மையின் நீட்சியாக
கயிற்றிலாடாமல் காற்றிலாடும்
சருகொன்றும்
படபடவென்று பிரதிபலித்து மறைகிறது
அந்தரங்க பிம்பங்களை

உதிரும் இறகுகளின் மீது
எழுதப்பட்டேஇருக்கின்றன
சிறகுகளின் சமாதிகளும்
மற்றும் வாய் மௌனித்து அழும்
காவியங்களும்

கூட்டைவிட்டுப் புறப்பட்ட கீச்சுக்குருவியும்
வெயிலில் சிறகுகள் நனைந்து
கூட்டுக்கே திரும்ப எடுத்துச்செல்கிறது
திட்டமிட்ட பறத்தல்களை
அம்மு
நானோ அன்று சிறகுவிரித்தவன்
இன்னும் அப்படியேஉறைந்து நிற்கிறேன்
காலத்தில்

⬣ தங்கேஸ்



அகோர முகங்களில் முளைத்திருந்த
ரோமக்கால்கள்
சிலிர்த்தபடி உலவும் கனவுலகுச் சாத்தான்கள்
கழுத்தோரம் கடித்த பற்தடங்களில்
பொங்கி வழியும் குருதிக்குப் பெயரே
காதலாக இருக்கலாம்

துர்மரணத்தின் மயானச் சிதையில்
எரியும் எலும்புகள்
முறுக்கேறி எழுந்து அமரும்
பிணத்தின்
உருகித் தொங்கும் சதைத்திரட்சியின்
துர்நாற்றத்திற்குப் பெயரே
காதலாக இருக்கலாம்

மலக்குழியின் வாய்திறக்க
மொய்க்கும் புழுக்கள்
வீடேறிக் கொண்டு வரும்
மலத்தின்
காய்ந்து இருகிய தோற்றத்திற்கு மறுபெயரே
காதலாக இருக்கலாம்

நிர்வாணத்தின் பின்னிரவுத்
தாகத்தை உந்திச்செல்லும
காமத்தின்
நீர்த்து வழிந்த காலத்தின்
மறுபெயரே காதலாக இருக்கலாம்

ஏன் வசியா?!

காதலென்றால் புனிதமாகத்தான்
இருக்க வேண்டுமா என்ன?!
நாம் இப்படியும் இருந்துவிட்டுப் போவோம்!.

⬣ அம்பிகா குமரன்



மௌனமாக
இருப்பதொன்றே
இப்போதெல்லாம் இலகுவாக
இருக்கிறது..

எண்ணங்களுக்கேற்ற
சொற்களைத் தேடாமல்
நிச்சலனமாய்...
இதயப் பேரிரைச்சலை
கொட்டித் தீர்த்தபின்...

புயலுக்கு
முன்னும் பின்னுமான
பேரமைதியாய்....
பேச்சற்று நிற்கையில் தான்
உங்கள் செவிகளைக்
கூர்தீட்டிக் கொள்கிறீர்கள்..

கவனம்...
மௌனத்தின் ஒலியும்
உங்கள் செவிப்பறையைக்
கிழிக்கக் கூடும்..

⬣ மதுரா



தனிமையின் துயரம்
சங்கிலியைப் போன்றது
தொடரின் நீளம்
வரையறுக்க முடியாது.

பாடலின் நீட்சியில்
உருகும் மெழுகு போல்
நிறைந்திருக்கிறது வெளிச்சம்
இருள் விரட்டி.

ஒரு நூலுக்குள்
வெண்கட்டியின் திரட்சி
தான் அழுது அழுது
உலகையே ஒளியேந்துகிறது.

ஒவ்வொரு வீட்டின்
மூலைக் காரிருளை
உருகி உருகியே
இருளின் எதிர்ச்சொல்லாகிறது.

தனிமையின் பயணம்
நீண்டு நீண்டு
மெழுகுவர்த்தியை
பிரதியெடுக்கிறது....

வீரசோழன்
க.சோ. திருமாவளவன்



அரவமொழிந்த
பின்னிரவில்
அசைவற்றுக்
கொஞ்சம்
ஓய்ந்திருக்க நினைக்கும்
பெருமரத்தின்
கிளைகளை
அவ்வப்போது வந்து
அசைத்துவிட்டு
ஓடியொளிந்துகொள்ளும்
காற்றைப்போல...

கண்மூடி
உறங்க எத்தனிக்கும்
என்னை
அவ்வப்போது வந்து
உசுப்பிவிட்டு
வேடிக்கை பார்க்கின்றன
உன் நினைவுகள்!

⬣ வளவன் கரிகாலன்



எங்காவது பார்த்தீர்களா அவர்களை?
முதன்முதலில் ராணுவ வீரர்களை
"இவர்கள்தான் ரியல் ஹீரோக்கள்!
இவர்களுக்கு என் சல்யூட்" என்றார்கள்...
ராணுவ வீரர்களுக்கு
போதிய உணவில்லையென
ராணுவ வீரரே புலம்பியபோது
காணாமல் போனார்கள்!
எங்காவது பார்த்தீர்களா அவர்களை?
பச்சைப்பசுமை வயலில்
களைபறிக்கும் விவசாயிகளை
"இவர்கள்தான் ரியல் ஹீரோக்கள்!
இவர்களுக்கு என் சல்யூட்" என்றார்கள்...
அதே விவசாயிகள்
கடன் தள்ளுபடிக்காகக் கதறியபோது
காணாமல் போனார்கள்!
எங்காவது பார்த்தீர்களா அவர்களை?
பிள்ளைகளோடு குதூகலிக்கும்
அரசு பள்ளி ஆசிரியர்களை
"இவர்கள்தான் ரியல் ஹீரோக்கள்!
இவர்களுக்கு என் சல்யூட்" என்றார்கள்...
போதிய வகுப்பறைகளில்லை
கழிப்பறை வசதிகளும் சரியில்லையென
ஆசிரியர்கள் குரலெழுப்பியபோது
காணாமல் போனார்கள்!
எங்காவது பார்த்தீர்களா அவர்களை?
இப்போதும்கூட
கொரோனா நோயாளிகளுக்கு
சிகிச்சையளிக்கும் மருத்துவர்களை
"இவர்கள்தான் ரியல் ஹீரோக்கள்!
இவர்களுக்கு என் சல்யூட்" என்கிறார்கள்...
போதிய பாதுகாப்பு கவசங்கள் இல்லை
போதிய மருந்துகள் இல்லையென
இதே மருத்துவர்கள் குரலெழுப்பினால்
காணாமல் போகிறார்கள்!
கையில் கிரீடத்தோடு திரிவதும்
யார் தலையிலாவது பொருத்திவிட்டு
உடன் நின்று செல்ஃபியெடுப்பதுமாக
பரபரப்பு தேசபக்தகோடிகள்...
எங்காவது பார்த்தீர்களா அவர்களை?

வத்திராயிருப்பு
தெ.சு.கவுதமன்



எங்கோ பிறந்த பொம்மையை
உறவாக்கிக் கொள்வதில்
வருந்துவததேயில்லை
குழந்தை

கூடவே விளையாடினாலும்
தன் பொம்மையிடம்
வேறோர் குழந்தை
உறவு பாராட்டுவதை விரும்புவதேயில்லை

விளையாடாது
தூசி படிந்தே கிடந்தாலும் வேறொர் குழந்தை
விளையாட எடுத்தால் தன்னுடையதென தூக்கி
வைத்துக் கொள்கிறது
பயத்தில்

வளர்ந்த எல்லோர் மனதுள்ளும்
ஓர் குழந்தையிருக்கிறது

பிடித்த உறவுகளையெல்லாம்
அது பொம்மையாக்கி
விடுகிறது

● சுஜாதா கண்ணன்



வெளிநாட்களைக் கடத்திவிட்டு
குட்டிகள் நிரம்பிய வயிற்றோடு
சொந்த வீட்டிற்கே
வந்து சேர்கிறது பூனை
நீள் இடைவெளிக்கான உறவினை
வாலால் மாறி மாறி உரசிச் சொல்கின்றது
பேறுகாலத்தை மாம்பூக்களின் வாசனையால்
நிரப்புகிறது
குட்டிகளை ஈனுவதற்கேற்ற இடங்களை பச்சைத்
திராட்சைக் கண்களால் நோட்டமிடுகிறது
மடிமீது கிடத்திக்கொள்ள சீறல்களில்லை, நகம்
விரிப்பதுமில்லை..
காம்புகள் அழுந்த கையில் வைத்திருக்கும்
அப்பூனை
பிள்ளைகள் இல்லாத வீட்டில்
பிறந்த வீட்டு ஒத்திகையை திரையிட்டே
செல்கின்றது.

- ப.காளிமுத்து

# நுனி தூரிகை



வந்தமர்ந்தப் பறவையை
வரைந்து முடிக்கிறேன்
வெளியின் வெளியில்
கீச்... கீச்சென சத்தம்.

அச்சத்தத்தில் நுட்பமாய் நுழைகையில்
ஆழமாய்ப் புலப்பட்டது
வரைந்தது தாய்ப்பறவை.

குஞ்சுகளின் சத்தத்தைக் கேட்டதும்
தூரிகை குழைந்து மன்றாடுகிறது
என் வளைவுகளுக்கு வளையுமது
என்னிடம் முதல்முறை வரைகிறது
ஜீவகாருண்யமான விண்ணப்பம்.

நிபந்தனையற்ற அனுமதியில்
அதுவாய் வரைந்ததில்
வெளியின் வெளியில் கேட்ட
குஞ்சுகளின் சத்தம்
தெளிவின் தெளிவில் தெரிந்தது
உள் நுழைந்து நோக்கிய ஓவியம்
கண்முன் கிடந்தது காட்சியாய்.

தாய்ப் பறவையின் அலகிலிருந்தது
தேவைக்கேற்ற இரை.

- துரை. நந்தகுமார்.



அவிச்ச வேர்க் கல்லய
அடிமடியில கட்டிக்கிட்டு
வேகாத வெயில்ல
வேப்பங் கொட்ட பொறுக்குனவ...

வெள்ளாட்டுக் கறி கேட்டு
ஆத்தாக் கிட்ட அடம் புடிச்சி
அடுப்படி மூலைக்குள்ள
அடி வாங்குனவ ...

கோமதியக்கா கொல்லையில
குண்டுமல்லி பறிக்கப் போயி
தொள்ளக் காது கிழவிக்கிட்ட
வசவு வாங்கிக் கட்டுனவ.. :.

அம்மை நோய் கண்ட
அய்த்த மகனுக்காக
பால் காவடி எடுக்கப் போயி
ஆத்தா முகத்துல
அழுகையப் பாத்தவ

அய்யனாரு குளத்துக்குள்ள
அடி வரைக்கும் முங்கிப்போயி
கும்பி தல உரச
கொறவ மீனு காலுரச
கோவப்பழக் கண்ணோட
கரையேறி வந்தவ..

தலையாரித் தாத்தாவுக்கு
தண்ணியக் காட்டிப் புட்டு
கோவில் தோட்டத்துல
கொத்துமாங்க .. பறிச்சவ

ஆழ்மனசுல வேரோடி கிடக்கும்
அம்புட்டு நெனப்பையும்
இன்னைக்கும் நெனக்கிறேன்
றெக்கக் கட்டிப் பறக்குறேன்.

ஆனாலும்
எழுந்திரிக்கும் முன்னிருந்தது
கண்ணசரும் நேரம் வரை
ஆன்ட்ராய்டே கதின்னு
அதுகூடவே கிடக்கும்
என் ஆசை மக நாளைக்கு
இது போல நெனைக்கும் படி
எந்த ஒன்னும் இல்லேங்குற
ஏக்கம் வந்து வாட்டுதுங்க.

⬣ அமுதா தமிழ் நாடன்



பரணையில்
பழுப்பேரிய உன் கடிதம்..
பத்திரமாக புத்தகத்தின்
நடுவில் பதுங்கியிருக்கும்
நீ பரிசளித்த மயிலிறகு...
உன்னுடன்
சுவாசித்த இடங்கள்...
உன் பெயர்
பொறித்து கடக்கும்
பேருந்து...
இவைகளை மிஞ்சய
உன் நினைவுகளின் வலிகளை தரக்கூடியது
ஒரு ராஜாவின் பாடல்...!!

- **சரண்யாசத்தியநாராயணன்**

வீட்டருகாமையில் அசையும்
தென்னம்பட்டை சுரக்கும்
காற்றை சேகரப்படுத்துகிறது
மூக்குக் குடுவை
கூடுகளில் அமர்ந்த
பறவைகளின் இறக்கைகளில்
சிறு சலனம்
தர்ப்பூசணி பிளந்து
வாசங்காட்டி மறைந்த சிவப்பின்
ஜொலிப்புகள்
நேற்றைய நிலமுரசும் பழைய புல்லின்
தேர்ந்த சருகுகளை நினைத்து
ஆசைபோடும் ஆட்டை
இன்றைய நிலையில்
கட்டி வைத்திருத்ததலால்
கருணையின் வெண்மை
கொஞ்சம் ஆட்டு ரோமத்திற்கு
கூடுகிறது

- **சே.தண்டபாணி தென்றல்**



என்னை புணரும்
இத்தனிமை ஓர் உயிர்கொல்லி வைரஸ்
மறுமையின் முடக்கம்
பாழடைந்த கோட்டை
காலி பாத்திரம்
துர்வாடை
புலன் நீர்த்த வெறுமை
கனத்த பாறை
கொலைவாள்
பலுவேறிய மௌன வலி
விசாரிப்புகளற்ற துயரம்
கவனிப்பற்ற வனம்
ஆறாத்தழும்பு
பெருவெடிப்பு
பேரலையின் அழுத்தம்
எரிச்சலூட்டும் வெறுமை
தவிப்பு
விலங்கு
சிலுவை
சாத்தான்
உளபிறழ்சி
சித்த நலக்கேடு
துண்டிக்கப்பட்ட பிரேதம்
சவப்பெட்டி
தனித்திருக்கும் உள்ளிருக்கைகளில் ஈக்கள்
மொய்த்துக்கிடக்கிறது
அழுகிய பிண்டம் போல்
சொற்கள் இல்லாதபோது
உளநோய் காப்பகமென எனதிருப்பு....

⬢ (Z) ஜபீர்

# ஊரடங்கு



வெறிச்சோடிய சாலையில்
சொந்த ஊர் சேர
கால்கள் துவழ நடந்து வரும்
வயோதிகரின்
கையில் உள்ள நெகிழி போத்தலில்
நெழிவது அவரின்
கண்ணீராக இருக்க கூடும்.....

சாலையோரம் நடுநிசிக்குளிரில்
கால்களுக்கிடையே வயிறு சுருங்கி
நெஞ்சம் அணைத்து தலை குறுக்கி
கைகளைக்கட்டி ஐந்தடி
உருவத்தை ஓரடியாக
உருமாற்றி அமர்ந்திருக்கும்
மூத்த குடிமகளை நிற்காமல் செல்லும்
ஏதேனும் போக்கு வண்டியில்
யாராவது ஏற்றிவிட்டால்
இருப்பிடம் அடைவாள்......

இன்றாவது
கால்வயிறு நிறைக்கலாம்
என்ற பேராசையில்
கைகளை நீட்டியபடி
கண்கள் மின்ன வேகவேகமாக
கூட்டம் சூழ்ந்த அந்த வாகனத்தை
நோக்கிவரும் மனம்பிறழ்ந்தவளிடம்
எப்படிச்சொல்வது???
அது மருத்தவப்பரிசோதனை
வாகனம் என்று....

ஊரடங்கு விடியாத நாளில்
குடுவையுடன் தாயற்றகுழந்தைக்கு
பால் வாங்க தெருத்தெருவாக
சுற்றியஇளம் தந்தையின்
மார்பினில் பால் சுரந்திருக்கலாம்!!!!!;
குழந்தை சிரிக்கிறது.....

தூய்மைப்பணியாளரின்
கைப்பேசியில்
''ராசாவே உன்ன நம்பி
இந்த ரோசாப்பூ இருக்குதுங்க ''
பாட்டு திரும்ப திரும்ப வர
அதைத்துண்டித்தபடியே
குப்பைகளுக்குள் முன்னேறுகிறார்....

அவரவர்க்கான
வாழ்க்கையை
கடத்திக்கொண்டிருக்கும்
ஏதோவொன்றைத்தேடி
அலையும் போதெல்லாம்
தோன்றுகிறது....

நம்பிக்கை தானே
வாழ்க்கை.

- தோழன்பிரபா



பக்குவமாய் பதப்படுத்தப்பட்ட
சடலங்களை
ருசிபார்த்துக்கொண்டிருக்கிறேன்
பொரித்தெடுக்கப்பட்ட வானலியில்
ஆங்காங்கே ஒட்டிக்கொண்டிருக்கும்
துணுக்குகளில்
பொறாமை சற்று தூக்கலாகவும்,
அரைவேக்காட்டில்
ஆணவம் கொஞ்சம் காரசாரத்துடன்
மிஞ்சியேயிருக்கின்றன
உதிரியுதிரியாயிருக்கும் அப்பண்டங்களில்
உப்புசப்பற்றுக்கிடக்கும் ஆசைகள்
கொதிக்கும் சினக்குளத்தில் மூழ்கி
எழுகின்றன,
தீர்க்கப்படாத தருக்கத்தில்
தீக்குளிக்கப்பட்ட வல்லமை
தீயாத வண்ணம்
விரிக்கப்பட்ட வாழ்க்கையிலையில்
அடுக்கிவைக்கப்பட்ட யாவையுமே
ருசிபார்த்துக்கொண்டிருக்கிறேன்
கௌரவத்தினால் வெட்டுண்ட மென்நாவினால்...

- கருவை ந.ஸ்டாலின்

**எதிர்பாராமல்
ஓர் இலை உதிர்கிறது.**



ஒரு குமிழ்
உடைவதும்
அலை மரிப்பதும்
மாமழை
பொழிவதும்
திடுமென முடிவதும்
கீழை வானத்து
வில்லொடிந்து போவதும்
நாமிருந்த இருக்கையில்
சருகொன்று
அமர்வதும்
நடக்கப் பழக்கிய
பாதை மறைவதும்
பாதை இருந்தும்
பயணம் முடிவதும்.....

கருப்பு நாளொன்று
விடிவதெல்லாம்
நமக்கெப்படி தெரியும்??

- **குறிஞ்சி நாடன்**

# கண்ணாடி இரகசியங்கள்



உன்
எல்லா சேட்டைகளையும்
பதிலுக்கு கண்ணாடி
அப்படியே செய்தாலும்
அது நானாகாது.

எந்த மாயவித்தைக்காரியாலும்
பறக்கும் முத்தத்தை
பதியவைக்க முடியாது
நிலைக்கண்ணாடியில்.

உன் பொய்களுக்கான
முதல் ஒத்திகைக்கு
கண்ணாடிதான்
காது கொடுக்கிறது
பின்புற அடர் ஆரஞ்சுகூட
உன் உண்மைகளின் சேகரம்தான்.

பெண்கள் அறையின்
கண்ணாடிகள்
ஆண்பால்.

உன்
பிம்பங்களற்ற தனிமையில்
கண்ணாடி
வேண்டா வெறுப்பாகத்தான்
மற்றவைகளைப் பிரதிபலிக்கும்.

காலத்தின் இயக்கத்தில்
மேலும் மேலுமென
உடைந்து சிதறும்
கண்ணாடிச் சில்லுகள்
பெருக்குவதெல்லாம்
பிரியமான பிம்பமொன்றைத்தான்.

உலகின்
முதல் செல்ஃபியை
பதிவு செய்தவள்
கண்ணாடியைக் கண்டுபிடித்தவனின்
காதலியாகத்தான் இருக்கும்.

நீ எத்தனை
பொட்டுகளை
ஒட்டி வைத்திருக்கிறாயோ
அத்தனை நெற்றிகள்
உன் நிலைக்கண்ணாடிக்கு.

நீதான் சொன்னாய்
இந்த ரகசியத்தையும்.
வானத்தின்
அதிலுள்ளவைகளின்
கூடுதல் சுமை
இருக்க வேண்டாமென்றுதான்
ஆமைகளின் முதுகில்
கண்ணாடியோடுகள்
பதிக்கப்படவில்லை
படைப்பிலென்று.

திரைச்சீலையை இழுத்துவிட்டு
இக்கண்ணாடியை மூடிமறைத்தாலும்
இவ்வறைக்குள் இருப்பது
நாமிருவர் மட்டுமல்ல
“யாருமில்லா தனியரங்கில்...
பாடலை
இன்னொருமுறை பாடேன் ப்ளீஸ்”.

⬣ **கார்த்தி**



இரவுகள்_தொலைக்கும்_உறக்கம்
பல இரவுகளைத் தின்றுவிட்டு
கொழுத்து அலைகிறது அது
உறக்கம் விழைந்து கட்டிலுக்கடியில்
ஒளிபவனையும்
கழுத்தைப் பிடித்திழுத்து  காலில் விழ
வைக்கிறது
காலைகளில் தாராளமாகவே விரிந்திருக்கும்
உறக்கத்தை
இரவுகளில் தன் கோரப்பற்களில் வைத்துச்
சிரிக்கிறது
நீ தள்ளி நடப்பவனோ தழுவி நடப்பவனோ
இரக்கமற்ற ஒரு சர்வாதிகாரனின் பிடியில்
தூக்கத்தைப் பறிகொடுத்திருக்கிறாய்
இமைகளைப் பிடுங்கி தன் விரல்களில் வைத்து
நம்மை வம்புக்கிழுக்கிறது
தோல்வியெனத் தெரிந்தே போர் இறங்கி
மடிந்து விழுகிறோம்
இரக்கமின்றி நம் விழிகளைத் கொத்திக் கொத்தி
மீன்கொத்திப் பறவையாய் நிலா ஒன்றின்
முதுகில் அமர்ந்தவாறே
மேகங்களை நம் மீது வீசி விளையாடுகிறது
கட்டிலின் மேல்விழும் மேகத்தை
முகம்வரை இழுத்துப் போர்த்துகிறேன்..
மன்னித்து விடுங்கள்... மன்னிக்க!

- முனியாண்டி_ராஜ்



கரைந்துபோன காலங்களின்
சுவடுகள் பின்னிழுக்க
நினைவுகளெல்லாம் வறண்டு
பாலைவனமாகிப் போனதால்
நடைகள் சுடுகையில்
விழுந்த விதைகள்
விருட்சங்களாகி
ஒவ்வொரு நினைவையும்
உயிரோடு தோண்டி எடுக்க
இதயமெங்கும் வெப்பச் சலனங்கள்
மெல்ல மெல்ல உயிர்க்குடிக்க
மேகங்களும் தூரமாய்
விட்டு விலகிச் செல்ல
காற்றின் ஓசைகளில்
கனவுகளைத் தேடுகிறது
கலைந்துபோன மணற்கோட்டை!

⬢ மு. பெ. சத்தியநேசன்

பதிவு எண் : 521/2018

தமிழக காவல்துறை மற்றும்
படைப்புக்குழுமம் இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு குறும்பட போட்டி-2020

## விரைவில்



போட்டி நடுவர்

இயக்குனர் **கே. பாக்யராஜ்**

**பரிசு**

**1,50,000**

கால அளவு

**8- நிமிடங்களுக்குள்**

கடைசி நாள்

**பின்னர் அறிவிக்கப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி

padaippu Media Networks, #23 Third Floor, Aarthi Arcade,
R.K. Salai, Mylapore, Chennai - 600 004